**2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திருமதி. ஆர்.எல். பிரியதர்ஷினி, பி.ஏ., பி.எல்.,**
2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 18 ம் நாள் வியாழக்கிழமை

**I.A.No.8/2026 in O.S.No.387/2023**

1) சரோஜா
2) விஜயலெட்சுமி
3) ராமச்சந்திரன் ...மனுதாரர்கள்/1, 2, 3 பிரதிவாதிகள்

//எதிர்//

பாப்பா (எ) வள்ளியம்மாள் ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு இந்நீதிமன்றம் முன்பாக 17.06.2026 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திருமதி.S.ஜெயலட்சுமி அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.D.சண்முகஜெகன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு வாதங்களையும் கேட்டு, ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் வழங்கும்,

**உத்தரவு**

1 முதல் 3 மனுதாரர்களுக்கு எதிராக அசல் வழக்கில் 10.07.2025 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி இந்த மனு உரிமையியல் விசாரணை முறை சட்டம் கட்டளை 9 விதி 7 ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டது.

**2) மனுவின் சுருக்கம்**

மனுதாரர்கள் இந்த மனுவில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குடியிருந்து வருகிறார்கள். எதிர்மனுதாரருக்கு அந்த விவரம் தெரிந்த பின்பும்

மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச தீர்ப்பாணை பெறுவதற்காக மனுதாரர்கள் முன்பு வசித்த முகவரியை குறிப்பிட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி முகவரியை குறிப்பிட்டுத்தான் செய்தித்தாளில் அறிவிப்பு வெளியிடப்பட்டது. மனுதாரர்களுக்கு மேற்படி அறிவிப்பு குறித்து எதுவும் தெரியாது. 19.09.2025 அன்று 4ம் பிரதிவாதியை சந்தித்தபோது தான் இந்த வழக்கு குறித்து தெரியவந்தது. உடனே மனுதாரர்கள் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே இம்மனு அனுமதிக்க வேண்டும்.

**<u>3) எதிருரையின் சுருக்கம்</u>**

மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுதாரர்கள் இந்த வழக்கை பற்றிய விவரங்களை தெரிந்து கொண்டு இந்த வழக்கை காலதாமதப்படுத்துவதற்காக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள்.

**4) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.**

5) இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

**6) தீர்வு**

7) 1 முதல் 3 மனுதாரர்கள் முதலில் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள முகவரியில் குடியிருந்ததாக மனுவில் ஒப்புக்கொண்டுள்ளார்கள். ஆனால் இந்த வழக்கு தாக்கல் செய்தபோது 1 மற்றும் 2 மனுதாரர்கள் தூத்துக்குடி மாவட்டத்தில் குடியிருந்ததாகவும் 3ம் மனுதாரர் சென்னை மடிப்பாக்கத்தில் குடியிருந்ததாகவும் கூறியுள்ளார்கள்.

8) மனுதாரர்கள் அசல் வழக்கு தாக்கல் செய்தபோது புதிய முகவரியில் வசித்தார்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் எந்தவித ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை. எனவே அசல் வழக்கு தாக்கல் செய்தபோது எதிர்மனுதாரர் அசல் வழக்கில் குறிப்பிட்ட முகவரியில் வசித்து வரவில்லை என்றும் புதிய முகவரியில் தான் வசித்து வந்தார்கள் என்றும் மனுதாரர் தரப்பில் கூறப்பட்ட சங்கதி இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை.

9) இருப்பினும் அசல் வழக்கானது 1ம் பிரதிவாதியின் கணவரும் 2, 3 பிரதிவாதிகளின் தகப்பனாருமான தங்கம் என்பவர் 13.01.2003 அன்று கிரையம் பெற்ற கிரைய ஆவண எண் 43/2003 செல்லத்தக்கதல்ல என்றும் மேற்படி 13.01.2003ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 4ம் பிரதிவாதிக்கு தங்கம் என்பவர் ஏற்படுத்தி கொடுத்த கிரைய ஆவணம் செல்லாது எனவும் 4ம் பிரதிவாதி 3ம் நபர்களுக்கு சொத்தை வில்லங்கம் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையிலும் இம்மனு அனுமதிக்கவில்லை எனில் மனுதாரர்கள் தரப்பு வழக்கை நடத்தும் வாய்ப்பு மனுதாரருக்கு கிடைக்காது என்பதால் நீதியின் நலன் கருதி இம்மனுவை செலவுத்தொகையின் பேரில் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**10) இறுதியாக**

மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு செலவுத்தொகையாக ரூ.750/-ஐ 25.062026ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகிவிடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 18 ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
orders uploaded on 18.06.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.06.18 15:33:29 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல்
நீதிபதி, திருநெல்வேலி

<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u> - இல்லை
<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்</u> - இல்லை

PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
orders uploaded on 18.06.2026
Digitally signed by PRIYADHARSINI RAMAKRISHNAN LISAMMAL
Date: 2026.06.18 15:33:36 +0530

2 வது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி

வது கூடுதல் மாவட்ட
உரிமையியல் நீதிமன்றம்,
திருநெல்வேலி **I.A.No.8/2026 in O.S.No.387/2023**

சீரான – உத்தரவு

**<u>நாள்–18.06.2026</u>**